
மாலை முரசு

பக்கங்கள் 18+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 23 செவ்வாய்க்கிழமை 07.01.2025 | அதிர்வு 159


## கல்கிஸையில் அதிகாலை இருவர் சுட்டுப் படுகொலை



கல்கிஸை – வட்டரப்பல – செம்பலன் கொட்டுவ பகுதியில் இன்று அதிகாலை நடத்தப்பட்ட 04


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


### வெறும் கோஷங்களுக்குச் சுருங்கிப்போகாது

# புதிய அரசியல் கலாசாரத்துக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவோம்

### புது வருடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

“மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதில், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கேந்திர ஸ்தானமாக, இந்த உயரிய நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு தனித்துவமானதொன்றாகும். வெறும் கோஷங்களுக்குச் சுருங்கிப் போகாது, புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் நிறைவேற்றப்படும், மக்கள் சார் அரசியல் கலாச்சாரத்தை உருவாக்க நாடாளுமன்றத்திலுள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 04



# இலங்கையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள்

### புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி அறிவுறுத்து

சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் கீர்த்தியை உயர்த்துவது தூதுவரின் பொறுப்பு என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலங்கையின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் இருந்தன எனவும், புதிய நியமனங்களைப் பெற்ற இராஜதந்திரிகளிடம் இருந்து அவ்வாறானவற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 04





# பொலிஸ், காணி அதிகாரங்களை வடக்கு மக்களுக்கு வழங்காதீர்கள்

## அநுர அரசிடம் ராகுல தேரர் இடித்துரைப்பு

"வடக்கு மக்களுக்குரிய வரப்பிரதாசங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால், பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக்கூடாது."

– இவ்வாறு வனவாசி ராகுல தேரர் வலியுறுத்தினார்.

இங்கிரிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கில் சிறு பிரச்சினை இருப்பதாக உணரமுடிகின்றது. அங்குள்ள மக்களுக்கு வரப்பிரசாதங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர ஏனையவற்றை வழங்கவும்.

இலங்கை என்பது சுயாதீன நாடு. நாம் இந்தியாவின் கைப்பாவையாகவும் மாறக்கூடாது. வெளிநாட்டுத் தொடர்புகள் அவசியம். அதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதாக மாற்ற வேண்டும்.

வெளிநாட்டுத் தூதரக சேவைகளில் உள்ளவர்கள் மாற்றப்பட வேண்டும். சிறப்பாக வேலை செய்யக்கூடியவர்களை நியமிக்க வேண்டும்." – என்றார்.







# வவுனியா மாவட்டத்தில் 113 பேருக்கு டெங்கு நோய்

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழைக்காலங்களில் மழை நீரானது டெங்கு நுளம்பு பெருக்கும் வகையில் தேங்கி நிற்காமல் இருப்பதற்காகச் சுகாதார பரிசோதகர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயினால் பாதிப்படைந்துள்ளனர்.

அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேலும் தெரிவித்துள்ளது.



# இராணுவத்தினரின் தடுப்பு வேலிகளை தகர்த்துக்கொண்டு உள்ளே சென்ற ஓட்டோ

## வசாவிளானில் இன்று அதிகாலை பரபரப்பு





(ந.லோகதயாளன்)

வசாவிளான், குட்டியப்புலம் பகுதியில் இராணுவத்தினரின் தடுப்பு வேலிகளைத் தகர்த்துக் கொண்டு உள்ளே சென்ற ஓட்டோவால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். வலிகாமம் வடக்குப் பகுதியில் இன்று அதிகாலை வேளை பயணித்த ஓட்டோவே இவ்வாறு இராணுவத்தினரின் தடுப்பு வேலிகள், அலங்காரத் தொட்டிகளைத் தகர்த்து உடைத்துக்கொண்டு உள்ளே சென்றது.

இதன்போது காவல் பணியில் இருந்த இராணுவச் சிப்பாய் பதற்றமடைந்து ஓடிச் சென்றார்.

தெரு நாய் ஒன்று ஓட்டோவின் குறுக்கே சென்றபோது அதனை விலகிச் செல்ல முற்பட்ட சமயமே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோ கடும் சேதமடைந்தது. எனினும், அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயர் தப்பினர்.



# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்: இதுவரை 747 சந்தேகநபர்கள் கைது

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இதுவரை 747 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கைதாகியுள்ளவர்களில் 100 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் 41 வழக்குகளும், உயர்நீதிமன்றத்தில் 14 வழக்குகளும் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





## இலங்கையின்...

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுமாறும், அந்த நாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு முன்னின்று பாரபட்சமின்றி நியாயமாக செயற்படுமாறும் ஜனாதிபதி புதிய இராஜதந்திரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.



இலங்கைப் பணியாளர்கள் தொழில் புரியும் மத்திய கிழக்கு, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இராஜதந்திர சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும் பணியை இராஜதந்திர சேவையின் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டு வருவது தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு எனவும், அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசு தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 4 தூதுவர்களையும், உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நியமித்தார்.

இராஜதந்திர சேவையில் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறு இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி,

- கட்டார் தூதுவராக – ஆர்.எஸ்.கான் அஷாத்
- ரஷ்ய தூதுவராக – திருமதி எஸ்.கே. குணசேகர
- குவைத் தூதுவராக – எல்.பி.ரத்நாயக்க
- எகிப்திய தூதுவராக – ஏ.எஸ்.கே.செனவிரத்ன
- நியூசிலாந்து உயர்ஸ்தானிகராக – டபிள்யு.ஜீ.எஸ். பிரசன்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

---

## புதிய அரசியல்...

புது வருடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“சபாநாயகர் தலைமையிலான அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், செயலாளர் நாயகம் தலைமையிலான அனைத்து நாடாளுமன்ற ஊழியர்களுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஒரு வருடமாக அமைய வாழ்த்துக்கள்.” – என்றார்.

---

## கல்கிஸையில்...


துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 36 வயதுடைய ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 20 வயதான மற்றுமொருவர் சிகிச்சைகளுக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதன்போது, அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேற்படி இருவரும் தங்களது வீட்டிலிருந்தபோது, இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளைக் கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கடமையைச் செய்யுமா சட்டம்?

“கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்?”

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கருத்து வெளியிட்டிருக்கின்றார். “சட்டம் தன் கடமையைச் செய்யும். குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது. அவர்கள் தப் பித்து ஓடவும் முடியாது.”- என அவர் தெரிவித்துள்ளார்.

இப்படி வெறுமனே கணக்குப் பிள்ளை பாணியில் பேசுவதில் - அளப்பதில் - அர்த்தமில்லை. கணக் குப் புத்தகம் பதிந்தது போல விட யங்கள் செயலில் அரங்கேற வேண் டும். அப்படி விடயங்கள்நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இந்தச் சமயத்தில்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஒரு பெரும் அத்துமீறல் குறித்து இலங்கை ஆசிரியர்சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உயர் கல்வி இராணுவமயமாக்கலுக்கு எதிராக தலைநகரில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட முப்பதுக்கும் மேற் பட்டோர் கடத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு மாறாகப் பலவந்தமாக தனிமைப்படுத் தப்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து நடவடிக் கைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை ஆசிரியர்சங்கத்தின் பொதுச்செயலாளர் தற்போதைய பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலவசக் கல்விக்கான உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் இராணுவமயமாக்கலுக்கு எதிராகவும் ‘இலவசக் கல்விக்கான மாணவர் இயக்கம்’ இந்தப் போராட்டத்தை 2021 ஜூலை 8 இல் ஏற்பாடு செய்திருந்தது.

அதன் போது தொற்றுநோய் சட்டங் களை மீறினர் எனக் குற்றம் சாட்டப் பட்டு பௌத்த பிக்குகள் மற்றும் வயோதிபப் பெண்கள் உட்பட 34 செயற் பாட்டாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அன்றைய தினம் அந்தக் குழுவினரை பிணையில் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நிரஞ்சனா டி சில்வா உத்தரவிட்டிருந்தார். அவர்களைத் தனிமைப்படுத்த அனுமதி வழங்குமாறு வெலிக்கடை பொலிஸார் நீதிமன்றில் கோரிய போது, அவர்களை தனிமைப்படுத்த் உத்தரவிடுவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென நீதிவான் தெரிவித்திருந்தார்.

நீதிமன்றத்திற்கு வெளியே அரசியல் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களின் எதிர்ப்பையும் மீறி, நீதிமன்றத்திலிருந்து பலவந்தமாக தொழிற் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினரை பஸ்ஸில் ஏற்றித் துறைமுக பொலிஸுக்கு அழைத் துச் சென்ற பொலிஸ் அதிகாரிகள், அங்கிருந்து முல்லைத்தீவு விமானப் படை தளத்திற்கு கட்டாய தனிமைப் படுத்தலுக்குக் கொண்டு சென்றனர். விமானப்படைத் தளத்தில் இவர்களை வலுக்கட்டாயமாக தடுத்து வைத்தமைக்கு எதிராக உள்ளூர் மற்றும் சர்வதேச எதிர்ப்புக் கிளம்பியதன் காரணமாக எட்டு நாள்களுக்குப் பின்னர் அப்போதைய அரசாங்கம் அவர்களை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த அடாவடித்தனத்தைப் புரிந்தோர் இன்னும் சுதந்திரமாகத்தான் இருக்கின்றார்கள் - ஒழுங்கு நடவடிக்கை எதனையும் எதிர்கொள்ளாமல்.

‘குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது. அவர்கள் தப்பித்து ஓடவும் முடியாது’ - என்று கூறும் இப்போதைய நீதி அமைச்சர் இந்த விவகாரத்துக்கு என்ன பதில் - விளக்கம் - கொடுக்கப் போகின்றார்?

# 12 பஸ் சாரதிகளுக்கு எதிராக ஹட்டனில் சட்ட நடவடிக்கை!

(மஸ்கெலியா)

பயணிகளுக்கும் பொது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அனுமதியற்ற உபகரணங்களைப் பொருத்தி வாகனங்களை இயக்கிய 12 பஸ் சாரதிகளுக்கு எதிராக ஹட்டன் பொலிஸார் சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

சாரதிகள் ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான உபகரணங்களை அகற்றுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

தூய்மையான இலங்கை என்னும் திட்டத்தின் ஒரு பகுதியாக, பஸ்களின் ஆய்வு கடந்த 2 ஆம் திகதி தொடங்கியது.

பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை தரங்களுக்கு இணங்குவதை உறுதி செய்யும் நோக்கத்தில், ஹட்டனில் இருந்து புறப்படும் பஸ்களையும், தொலைதூர இடங்களிலிருந்து வரும் பஸ்களையும் பொலிஸார் இலக்கு வைத்தனர்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களில் அதிகப்படியான உரத்த சத்தத்தை உருவாக்கும் ஹோரன்களும் பாதுகாப்பற்றதாகக் கருதப்படும் கூடுதல் விளக்குகளும் அடங்கும். இந்தப் பொருள்களை அகற்றவும், ஓட்டுநர்கள் இணங்கும்வரை பஸ்களின் வருவாய் உரிமத்தை தக்கவைத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக பஸ்கள் ஏழு நாள்களுக்குள் மறு ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பங்களாதேஷ் தூதருடன் சிராஷ் மீராசாஹிப் சந்திப்பு

(எஸ். சினீஸ் கான்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளரும், மெட்ரோபொலிடன் கல்லூரியின் தலைவருமான கலாநிதி சிராஸ் மீரா சாஹிப் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் தூதர் அந்தலிப் எலியாஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு தூதரக அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சமகால அரசியல், சமூக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# நெடுங்கேணி அறநெறிப் பாடசாலை கட்டடத்துக்கு ரூ. 9 லட்சத்து 50 ஆயிரம்!

## தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, நெடுங்கேணி, தண்டுவான் வெள்ளைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலைக்கு ஏற்கனவே இருந்த கட்டடத்தைச் சூழவுள்ள இரு பக்க கொட்டகைகள் புதிதாக அமைக்க 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை நிர்வாகத்திடம் நேற்று முன்தினம் (05) கையளிக்கப்பட்டுள்ளது.

அறநெறிப் பாடசாலை இணைப்பாளர் அ.சுகந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி, சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜதீஸ், கிராம சேவையாளர் செல்வி லினிசா மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அரசு, தனியார் ஊடாகவும் மக்களுக்கு அரிசியை வழங்கும் வேலைத் திட்டங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ள அரசின் ஊடாகவும் தனியார் நிறுவனங்கள் ஊடாகவும் அரிசியை வழங்கும் வேலைத் திட்டங்களை எமது அரசின் ஊடாக முன்னடுத்துள்ளார் என்று நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஞ்சுல சுரவீர தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை பொகவந்தலாவ நகரில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சில அரிசி ஆலைகளின் சொந்தகாரர்கள், அவர்கள்தான் நாட்டைப் பராமரிக்கின்றனர் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அரிசித் தட்டுபாட்டை ஏற்படுத்தி மக்களை வீதிக்கு இறக்கி அரசைக் குழுப்புவதற்கான நடவடிக்கையைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

நாங்கள் ஒன்றை கூறுகின்றோம். அந்தக் காலம் முடிந்துவிட்டது. காணப்படும் பிரச்சினைகளை நாம் அறிவு ரீதியில் தீர்க்கப் பார்கின்றோம். மக்கள் சார்ந்த சந்தையை நாம் ஏற்படுத்துவோம். வீழ்ச்சியடைந்த கூட்டுறவுச் சங்கங்களை நாம் மீண்டும் கட்டியெழுப்புவோம். ஒருவர் மற்றும் இருவரிடம் இருந்த அரிசி ஆலைணைப் பொது மக்களிடம் ஒப்படைப்போம். அவ்வாறு செய்யும் போது அரிசி ஆலையில் நெல்லுகளுக்கான தட்டுபாடுகள் ஏற்படாது. இவ்வாறான ஒரு தீர்வை நாங்கள் தேடும் பொழுது ஐக்கிய மக்கள் சக்தியினர் தற்பொழுது தடுமாற்றங்களை மேற்கொள்கின்றனர்.

நாங்கள் தனியார் துறையினருக்கு இடமளிப்போம். ஏகாத்திபத்தியத்துக்கு இடமளிக்கமாட்டோம். தனியார் துறையினருக்கு நாங்கள் ஆசிர்வாதம் அழிக்கின்றோம். நீங்கள் போடும் தூண்டில்களில் நாங்கள் மாட்ட மாட்டோம். தட்சிலிஷ் சேனாநாயக்கவைக் கைது செய்து நியாத்தை விசாரிக்கும் போது அரசுக்கு அவப்பெயரை பெற்று கொடுக்க சர்வதேச மட்டத்தில் முயற்சி செய்வார்கள். அவ்வாறு செய்யும் போது வெளிநாட்டு பயணிகள் எமது நாட்டுக்கு வரும் தொகை குறைவடையும். தனியார் துறையினர் இங்கு வந்து வியாபரம் செய்வது குறைவடையும். இலங்கையோடு காணப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் குறைவடையும். அப்போது டொலரின் பெருமதி குறைவடையும்.

அரிசி பிரச்சினையை ஏற்படுத்தி எமது அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த எதிர்கட்சியினர் முயற்சி செய்கின்றனர். நீங்கள் கூறும் திட்டங்களை நாங்கள் ஒருபோதும் மாற்றி கொள்ளமாட்டோம் எமது அரசியல் நிகழ்ச்சிகளை எமது அரசுக்கு ஏற்றவாறே முன்னெடுத்து செல்லுவோம்.- என்றார்.



# ஒப்பனை கலைஞர்களுக்கான தேசிய போட்டி கொழும்பில்

‘மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்கா ஏற்பாட்டில்’ எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 திகதி ஒப்பனை கலைஞர்களுக்கான தேசிய போட்டி கொழும்பில் நடைபெற வுள்ளதாக அதன் ஸ்தாபகரும் தலை வருமான அனு குமரேசன் தெரிவித்தார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊட கவியலாளர் மாநாடு கொழும்பு 6 – வெள்ளவத்தையில் நேற்று நடை பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அனு குமரேசன்,

“கடந்த வருடம் இலங்கையின் 17 மாவட்டங்களில் இருந்தும் போட்டியாளர் கள் பங்கு பெற்றிருந்தார்கள். இதில் பலர் வெற்றிவாகை சூடியிருந்தார்கள். அத்துடன் இந்த போட்டி நிகழ்ச்சியின் மூலமாக போட்டியாளர்களுக்கு துறை சார் நிபுணர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் திறனாய்வினூடாக கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்படுவதோடு பணப் பரிசுகளையோ அல்லது வேறெந்த கவர்ச்சிகரமான பரிசுகளையோ காட்சிப் படுத்தாமல் முழுவதுமாக அவர்களின் திறமைகளையும் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு, போட்டியாளர்களின் திறமைகளுக்கு ஒரு களமாகவும் நடாத்தப்படும் ஒரு தேசிய போட்டி நிகழ்வாகும்.”– என்றார்.








மேலும் இந்நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகரும், தலைவருமான அனு குமரேசனுடன் செயலாளர் வித்தியா நிரஞ்சன் மற்றும் பொருளாளர் சிதம்ப ரம் அஜித் ஆகியோர்களும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்ததுடன், அமைப்பின் நிர்வாக குழுவினர் மற்றும் கடந்தமுறை வெற்றியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர்கள் ‘மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்காவினூடாக’ கடந்த காலங்க ளில் சர்வதேச ரீதியாக அழகுக்கலை போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட் டியுள்ளனர்.

இதன் தலைவரான அனு குமரேசன் அண்மையில் ‘ஏசியன் புக் ஆஃப் ரெக் கார்ட்ஸ்’ இல் அதிக ஒப்பனைக் கலை ஞர்களை ஒன்று திரட்டி மிகக் குறுகிய நேரத்தில் கண் அலங்காரம் செய்து உலக சாதனைப் படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# அதிபரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் கூறி பாடசாலையின் முன்பாகத் திரண்ட பெற்றோர்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

பாடசாலை அதிபரின் நடவடிக் கைகளை எதிர்த்து பெற்றோர்கள் பாட சாலை முன்பாகத் திரண்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் காணப்பட்டது.

சம்மாந்துறை வலயக்கல்வி அலு வலகத்துக்கு உட்பட்ட இஸ்மாயில் வித்தி யாலயத்தில் அதிபரின் நடவடிக்கை களை எதிர்த்து பெற்றோர்கள் பாடசாலை முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை (07) காலை 9 மணியளவில் ஒன்று கூடினர். இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதன் போது, குறித்த இடத்துக்கு வருகைதந்த சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர், பெற்றோர்கள் ஒன்று கூடியதற் கான காரணங்களை கேட்டறிந்து சம் மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளரிடம் எடுத்துக் கூறினார்.



சம்மாந்துறை வலயக் கல்வி அலு வலகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப் பான பிரதி கல்வி பணிப்பாளர் பீ.எம். வை. அறபாத் மற்றும் சம்மாந்துறை கோட்டக் கல்வி பணிப்பாளர் என்.எம். நாசிர் அலி ஆகியோர் குறித்த பாட சாலைக்கு முன்பாக ஒன்று கூடிய பெற் றோர்களுடன் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இப்பிரச்சினை சம்மந்தமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (10) வல யக்கல்வி அலுவலக அதிகாரிகளால் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, பாடசாலை முன் னால் ஒன்று கூடியிருந்த பெற்றோர்கள் அமைதியாகக் கலைந்து சென்ற னர்.

இதுதொடர்பான மேலதிக விசார ணைகளை சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகம் மேற்கொண்டு வருகின் றது.

# குகதாசன் எம்.பியுடன் மக்கள் சந்திப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருக்கோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண் முகம் குகதாசனின் மக்கள் சந்திப்பு நேற்று (06) நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் திருக்கோணமலை மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் கல்வி , சுகாதாரம், மருத்துவம், சுய தொழில், அபிவிருத்தி முதலிய சிக்கல் களை மக்கள் அவரிடம் தெரிவித்தனர்.

மக்களது சிக்கல்களை கேட்டறிந்த எம்.பி. உரிய நிறுவனங்களிடம் இருந்து மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியைச் செய்து தருவார் என்று உறு தியளித்தார்.

இந்தச் மக்கள் சந்திப்பானது ஒவ் வொரு மாதமும் நாடாளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த நாள்களில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.






# ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின் 4 ஆவது தேசிய மாநாடும் கௌரவிப்பும்!

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

"குடும்ப கட்டமைப்பைப் பேணு பவளே ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்" எனும் தொனிப்பொருளில் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு நடத்திய முஸ்லிம் பெண்கள் ஆளுமைகளின் 4 ஆவது தேசிய மாநாடு திருகோணமலையில் நேற்று முன்தினம் (05) ஜுபிலி மண்டபத்தில் இடம்பெற்றது.

இலக்கிய வித்தகரும், அமைப்பின் தலைவியுமான சம்மாந்துறை மஷூறா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஸீர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவனீதன் விஷேட அதிதியாகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைச் சேர்ந்த ஏ.எப்.எம்.அஸ்ரப் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், திருகோணமலை ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் எம்.எம்.எம்.முஹைஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் "பெண்ணெனும் பேராறு" என்ற தலைப்பில் சிறந்த கவியரங்கு ஒன்றும், அவரி சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றன.




# சட்டவிரோதமாக பனைமரங்கள் தொடர்ந்து தறிக்கப்படுகின்றன!

## நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றார் பனை அபிவிருத்தி சபையின் தலைவர்

(எஸ்.நிதர்ஸன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் சட்டவிரோதமாக பனைமரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வருகின்றன என்று பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சி பளைப் பகுதியில் சட்டவிரோதமாக பனை மரம் வெட்டப்பட்ட பகுதியையும் பனை அபிவிருத்தி சபையினர் சுற்றிவளைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார் என்று கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மற்றும் கிளிநொச்சி உட்பட வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.



இவ்வாறு பனைமரங்கள் வெட்டப்படுகின்ற பகுதிகளில் பனை அபிவிருத்தி சபையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பளைப் பகுதியில் பல பனை மரங்கள் வெட்டப்பட்டு ஏற்றப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய உடனடியாக பனை அபிவிருத்தி சபையினர் சுற்றிவளைத்தனர்.

இதன் போது அங்கு வெட்டப்பட்ட பனை மரங்களில் ஒரு தொகுதியை ஏற்றிக் கொண்டு சென்றுவிட்ட அதே நேரம் மிகுதி மரங்கள் அங்கு காணப்பட்டன.

இதனையடுத்து சம்பவம் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பளை பொலிஸ் நிலைந்த்தில் முறைப்பாடு செய்துள்ளோம்.- என்றார்.






# தமிழினப் பற்றாளர் அமரர் மதிசூடிக்கு ஆத்மார்த்த அஞ்சலி நிகழ்வுகள்!

## நலிவுற்ற மக்களுக்கு உதவிகளும் வழங்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

சமூக செயற்பாட்டாளர், தமிழினப் பற்றாளர் அமரர் குலத்துங்கம் மதி சூடியின் இரங்கல் மற்றும் ஆத்மார்த்த அஞ்சலி நிகழ்வுகள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரவலாக இடம் பெற்றன.

அதேவேளை, அவரது 41 ஆவது நாள் நினைவு தினத்தை முன்னிட்டு பின்தங்கிய பிரதேச நலிவுற்ற மக்களுக்கு அரிசி, உடுபுடைவைகள் பெட்சீற் உள்ளிட்ட உதவிகள் மற்றும் உணவுகள் வழங்கப்பட்டன.

பொத்துவில் செல்வபுரம், தாண்டியடி, சங்குமண்கண்டி, திருக்கோவில் காயத்ரி கிராமம், சொறிக்கல்முனை, காரைதீவு, குருக்கள்மடம்,தாந்தாமலை கற்சேனை, கல்லடி ஆகிய இடங்களில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கனடாவில் இருந்து இதற்கென வருகைதந்த அவரது மனைவி திருமதி நித்தி மதிசூடி, மருமகன் மாதவன், உறவினர் மதனராஜன், டாக்டர் குணா ஆகியோர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகள் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுல மாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றன.

பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.



இணைப்பாளராக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் கீதா ஜெயசிறில் ஆகியோர் செயற்பட்டனர்.

கனேடிய தமிழ் வானொலி பத்திரிகை துறையின் முன்னோடிகளில் ஒருவரும் நாடறிந்த பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடியின் இழப்பு தாயகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா இரங்கல் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த குலத்துங்கம் மதிசூடி கனடாவில் கடந்த நவம்பர் 22 ஆம் திகதி அகால மரணமடைந்தார்.

பிரபல சமூக சேவையாளர் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வந்தவர். அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு கிழக்கில் வழங்கி வந்தவர்.

தாம் பிறந்த மண்ணை வெகுவாக நேசித்த தமிழினப் பற்றாளர் மதிசூடி, கொரோனா காலகட்டத்திலும் வெள்ள அனர்த்த காலத்திலும் இங்கு வந்து பாரிய சேவைகளை செய்தவர்.

அது மாத்திரமல்ல ஒவ்வொரு வருடமும் வந்து நலிவுற்ற மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவி செய்து வந்தவர்.

ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். அமைதியான முறையில் அடக்கமாக சில ஆலோசனைகளை வழங்கி சிறப்பித்து பல ஆக்க பூர்வமான பல திட்டங்களிலும் ஒத்துழைத்தவர்.

அவர் தமிழினத்தின் மிகுந்த பற்றாளராக விளங்கியவர். கனடாவில் கடந்த 40 வருடங்களாக தாயக மக்களின் உணர்வுகளை விளங்கிடச் செய்தவர்.- என்றார்.









# இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீடு புலோலி மேற்கில் கையளிப்பு!

வடமராட்சி வடக்கு, பிரதேச செயலர் பிரிவில் உள்ள புலோலி மேற்கு கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (06) இடம்பெற்றது.

அமெரிக்காவில் வசிக்கும் ஜுனோ மற்றும் சாம் சின்னையா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் 521 ஆம் படைப் பிரிவினரால் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடு கையளிக்கும் நிகழ்வில் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத் கலந்து கொண்டு வீட்டை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன், இராணுவ உயர் அதிகாரிகள், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, அந்தப் பகுதி மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# யாழ். நகரில் இளைஞனைத் தாக்கிய பிரதான சந்தேக நபர்கள் மூவர் கைது!

(எஸ்.நிதர்ஸன்)

யாழ். நகரில் இளைஞர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியவர்களில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர்கள் எனக்கருதப்படும் மூவர் இன்று (07) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமறைவாக இருந்த இந்த நபர்கள் யாழ். நகரில் நடமாடுகின்றனர் என்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ். நகரில் புத்தாண்டுக்கு முன்தினம் (31) இரவு ஒன்று கூடிய இளைஞர் குழுவினர், ஓட்டோவில் சாகசம் காட்டியுள்ளனர். அத்துடன் இளைஞர் ஒருவரை கடுமையாக தாக்கியிருந்தனர்.

இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இரண்டு ஓட்டோக்களும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இன்று கைதான மூவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.





# ஈழத் தமிழரின் அரசியல் உரிமையை ஆதரித்த ஜஸ்டின் ட்ரூடோ !

- ஐங்கரன் விக்கினேஸ்வரா.

கனடாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பல தீர்மானங்கள் நிறைவேறி வெற்றி கண்டதும், அதில் முக்கியமாக இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தற்போது பதவி விலகிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக் காலத்தில்தான்.

**ஈழத் தமிழருடன் ஜஸ்டின் ட்ரூடோ**

கனடாவில் தமிழ் சமூகம் கடந்த பத்து வருடங்களில் அரசியல் ரீதியான குறிப்பிட கூடிய வளர்ச்சியை அடைந்ததும், தமிழ் மரபு திங்கள் கனடாவில் அறிமுகப் படுத்தப்பட்டதும் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக்காலத்தில் தான் எனக் கூறினால் மிகையாகாது.

அத்துடன் தமிழ் சமூக மையத்துக்கான பெரு நிதியை பெற்று கொடுத்ததும், ஆளும் கட்சியில் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றுக் கொண்டு, முதலாவது கனேடிய தமிழ் மந்திரியை பெற்றுக் கொண்டதும் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக்காலத்தில்தான்.

ஈழத் தமிழர்களை கொன்று குவித்த இனப் படுகொலையாளிகளுக்குப் பயணத் தடையை விதித்ததும் இக்கால கட்டத்தில் தான் என்பதும் உண்மையாகும்.

அத்துடன் சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையிலான பிணக்குகள் அதிகரித்திருக்கின்ற காலக்கட்டத்தில் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்ச்சியாக இடம் பிடிப்பதற்கும், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் முக்கியமான நாடாக கனடா உள்ளது. அதன் தொடர்ச்சியை உறுதி செய்தமையும் முக்கியமானது .அதில், தற்போது பதவி விலகிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பங்கு முக்கியமானது.

**உள்நாட்டு அரசியல் சிக்கல்**

உட்கட்சி அரசியல் சிக்கல்களால், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இன்று தனது பதவி விலகலை அறிவித்தார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த ஆண்டு ஒக்ரோபரில் கனடாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆனால் அதற்கு முன்னதாகவே அவர் பதவி விலகியுள்ளார்.

ஒன்பது வருட பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஜஸ்டின் ட்ரூடோ தனது சொந்த கட்சியால் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், லிபரல் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்யும்வரை பதவியில் நீடிப்பேன் என அறிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலில் நாட்டுக்கு உண்மையான தெரிவு தேவைப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஒக்ரோபரில் கனடாவில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகினால் அது லிபரல் கட்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் அரசை ஆதரித்து வந்த புதிய ஜனநாயகக் கட்சி, ஆதரவைத் தொடர மறுத்ததில் இருந்து ட்ரூடோவுக்கு நெருக்கடி அதிகரித்துவிட்டது. ஏற்கெனவே சர்வதேச நெருக்கடிகளை ட்ரூடோ சந்தித்து வரும் நிலையில் உள்நாட்டு அரசியலில் அவருக்கு நாளுக்கு நாள் எதிர்ப்பும் வலுத்து வந்தது.

ட்ரூடோவின் லிபரல் கட்சியின் முக்கிய கூட்டணிக் கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், மக்களுக்கு பணியாற்றுவதில் ட்ரூடோ தோல்வியுற்றார் என்றும் அவரது அரசு மீது எதிர்வரும் 27 ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இதனால் அவருக்கு மிகக் கடுமையான நெருக்கடி ஏற்பட்டது.





அதேபோல் கடந்த டிசெம்பரில் ட்ரூடோவின் அமைச்சரவையில் இருந்து துணைப் பிரதமரும், நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் ராஜினாமா செய்தார். இதனையடுத்து அவரது சொந்த லிபரல் கட்சிக்குள்ளேயே அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

**கருத்துக்கணிப்புகள் தோல்வி**

கருத்துக்கணிப்புகள் படி லிபரல் கட்சி மோசமான தோல்வியை சந்திக்கும் எனவும், இந்தச் சூழ்நிலையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், பிரதமர் பதவி விலகவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துவந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி▼



# ஈழத் தமிழரின் அரசியல் உரிமையை ஆதரித்த ஜஸ்டின் ட்ரூடோ !

தொடர்ச்சி▲

லிபரல் கட்சி மிக மோசமான நிலையில் இருந்த காலத்தில் – நாடாளுமன்றத்தில் மூன்றாவது இடத்தில் இருந்த காலத்தில் ட்ரூடோ கட்சியின் தலைமை பதவியை ஏற்றார்.

கனடாவுக்கு இணக்கமான அரசியல் அணுகுமுறையையும் அறிமுகப்படுத்துவதாகவும் பெண்களின் உரிமையை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதற்கான போராட்டம் போன்ற வாக்குறுதிகளை முன்வைத்தும் ஜஸ்டின் ட்ரூடோ 2015 இல் லிபரல் கட்சியை வெற்றியை நோக்கி கொண்டு சென்றார்.

ஆனால் கொரோனா பெருந்தொற்றை சமாளிப்பதற்காக ட்ரூடோ தனது நேரத்தின் பெரும் பகுதியை செலவிடவேண்டிய நிலை உருவானது.

நுகர்வோரையும் வர்த்தக சமூகத்தினரையும் காப்பாற்றுவதற்காக லிபரல் கட்சி பல நடவடிக்கைகளை எடுத்த போதிலும் வரவு – செலவு திட்டப் பற்றாக்குறை அதிகரித்து வந்தது. விலைகள் அதிகரித்ததால் பொது மக்களின் சீற்றமும் அதிகரித்தது.

எதிர்வரும் தேர்தல்களில் கட்சி தோல்வியடையலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமீபகாலமாக வெளியிட்டு வந்த அச்சத்தை அவர் சமாளித்து வந்தாலும், இறுதியில் தனது பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.





# கிரான் பிரதேச மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அதிகாரிகள் கள விஜயம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக அதிகாரிகள் கிரான் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கள விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஜி. பிரணவன் தலைமையிலான குழுவினர் மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் கிரான் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி லோஜினி விவேகானந்தராஜ் தலைமையில் கூலாக்காடு முருக்கன்தீவு மற்றும் பிரம்படி தீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராமங்களுக்கு களவிஜயம் மேற்கொண்டனர். அங்குள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் பற்றியும் தீர்க்கப்படாத குறைபாடுகள் பற்றியும் அவற்றை செயல்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அத்தோடு கிராமிய மட்ட சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் வரவழைக்கப்பட்டு அவர்களுடைய நடைமுறை செயற்பாடுகளில் எதிர்நோக்கப்படும் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பிட்ட பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள், காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் பொது மக்கள் ஆற்றைக் கடப்பதற்கான வழிமுறைகள், படகு மூலம் போக்குவரத்து மேற்கொள்வதால் முகங்கொடுக்கும் இன்னல்கள் பற்றியும் இதன் போது ஆராயப்பட்டது.

தரம் ஒன்பதுக்கு பின்னரான கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்குப் பிள்ளைகள் முகம் கொடுக்கும் சிக்கல்கள், வெள்ளநீர் கிராமங்களுக்குள் உட்புகுவதன் பின்னரான சுகாதார பாதுகாப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து முருக்கன் தீவு கிராம பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

# இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியர்கள்; சர்வதேச சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுங்கள்!

### ஜனாதிபதிக்கு அவசர கடிதம் எழுதினார் ரிஷாட் எம்.பி.

2024 டிசெம்பர் மாதம் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள மியன்மார் நாட்டின் ரோஹிங்கியா அகதிகள் தொடர்பில், சர்வதேச சட்டத்துக்கு அமையநடவடிக்கைமேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் புகலிடம் கோரி வரும் ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் தீர்மானம் குறித்து மிகுந்த கவலையுடன் உங்களுக்கு அறியத் தருகின்றேன். தங்கள் நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் இந்த மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு, சர்வதேச மனிதாபிமான கொள்கைகளை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

மியான்மரில் நிலவும் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக, ரோஹிங்கியா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது, உண்மையாகவே உயிர் அச்சுறுத்தலுக்காவே அன்றி, பொருளாதார புலம்பெயர்ந்தோராக அல்ல. ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம்



இந்த நபர்களின் அவல நிலையை அங்கீகரிக்கிறது. மேலும் மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு நாடாக, அவர்கள் பாதிக்கப்படக் கூடிய நேரத்தில், அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது நம்மீது கடமையாகும்.

அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எங்கள் நடவடிக்கைகள் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும். தனிநபர்கள் தங்கள் உயிருக்கு அல்லது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு திருப்பி அனுப்புவதைத் தடை செய்தல் வேண்டும். இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம் பாதிக்கப்படக் கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை நிரூபிக்கவும் இது உதவும்.

வரலாற்று ரீதியாக இலங்கை, துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமளிக்கும் ஒரு நாடாக இருந்து வருகிறது. பல இலங்கையர்கள் யுத்த காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். ரோஹிங்கியா அகதிகளின் தற்போதைய நிலைமை, கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் கொள்வது மிகவும் முக்கியமானது. மியன்மாரில் இந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்தில் உள்ள நிலையில், அவர்களை வலுக்கட்டாயமாக மியான்மருக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த அகதிகள் இலங்கையில் தங்கியிருக்கும்வரை, அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது அன்பும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும்.

மேலும், இந்த அகதிகள் தங்களுக்கு மீள்குடியேறக்கூடிய பொருத்தமான, பாதுகாப்பானதாகக் கருதப்படும் மூன்றாவது நாட்டை அடையாளம் காண்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும்.- என்றுள்ளது.






# வாய் சுகாதார பிரிவு சேவையை மேம்படுத்த மருத்துவ உபகரணம்

(ஏ.எல்.றியாஸ்)

கல்முனை பிராந்திய வைத்திய சாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வாய் சுகாதார பிரிவுகளின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, குறித்த பிரிவுகளுக்குப் பற்சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று (06) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மருதமுனை, அட்டாளைச்சேனை, இறக்காமம், அன்னமலை, ஒலுவில் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளின் வாய் சுகாதார பிரிவுகளுக்கும், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கல்முனை மஹ்மூத் பெண்கள் கல்லூரி, கல்முனை ஸாஹிறா கல்லூரி என்பவற்றின் பற்சிகிச்சை நிலையங்களுக்குமே இந்த மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.



# அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரம்: போராட்டம் நடத்திய தே.மு.தி.கவினர் கைது

அண்ணா பல்கலைக்கழக மாணவி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் தே.மு.தி.கவினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை மதுரவாயல் மின்வாரிய அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக, தே.மு.தி.க. துணை பொதுச் செயலாளர் எல்.கே.சதீஷ் தலைமையில் 200 இற்கும் மேற்பட்டோர் பேரணியாக வந்தனர். ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வழங்காத பொலிஸார், அவர்களை தடுத்து நிறுத்தினர். இதையடுத்து, பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட கட்சியினர், பின்னர் சாலை மறியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அனைவரையும் கைது செய்த பொலிஸார், அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைத் தனர்.

இதற்கிடையே போராட்டம் தொடர்பாக தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்ட அறிக்கையில்,

“ஜனநாயக முறைப்படி, எவ்வித அசம்பாவிதங்களும் நடக்காமல் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம். மக்களுக்காக நாம் நடத்தும் ஒவ்வொரு போராட்டமும், அவர்களது மனதில் நீங்கா இடம் பிடிக்கும்.” என்று தெரிவித்துள்ளார்.



# பொது இடங்களில் முகக்கவசம் அணியவேண்டும்; இந்திய மாநிலங்கள் பொதுமக்களுக்கு கோரிக்கை

பொது இடங்களில் சமூக இடைவெளி கடைபிடிப்பதுடன் பொதுமக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என இந்திய மாநிலங்கள் சில தமது பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில், தற்போது சீனாவில் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (human metapneumovirus) என அழைக்கப்படும் வைரஸால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் முதன்முதலில் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் தொற்று பாதிப்பு கர்நாடகாவில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவில் கூட்டமான இடங்களுக்கு செல்லும் மக்கள் கர்நாடகாவில் முககவசம் அணியுமாறு அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்தியா முழுவதும் எச்.எம்.பி.வி. வைரஸ் பரவி வருவதை அடுத்து, தமிழகத்தில் உள்ள பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரும்போது முககவசம் அணிய வேண்டும் என தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை தெரிவித்துள்ளது.

தும்மல், இருமல் வரும்போது வாய், மூக்கை மூடுதல், கைகளை அடிக்கடி கழுவுதல், நெரிசல் மிகுந்த இடங்களில் முககவசம் அணிதல், தேவை ஏற்பட்டால் சுகாதார நிலையத்துக்கு தகவல் தெரிவிப்பது போன்ற பிற சுவாச நோய்த் தொற்றுகளுக்கான தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எச்.எம்.பி.வி என அழைக்கப்படும் இந்த வைரஸா ல் சீனாவின் வடக்கு மாகாணங்களில் வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ளதோடு, இதில் சிறுவர்கள் பலர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.




# திபெத் நிலநடுக்கத்தில் 53 பேர் உயிரிழப்பு!

சீனாவின் மலைப்பகுதியான திபெத்தில் இன்று செவ்வாய்கிழமை காலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் குறைந்தது 53 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 62 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

பீஜிங் நேரப்படி 09:05 மணியளவில் (01:00 GMT) திபெத்தின் புனித ஷிகாட்சே நகரத்தை தாக்கிய நிலநடுக்கம் 7.1 மெக்னிடியூட் அளவு மற்றும் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் கூறியுள்ளது.

எனினும் நிலநடுக்கம் 6.8 மெக்னிடியூட் அளவில் ஏற்பட்டதாக சீன அரசு ஊடகம் தெரிவித்தது.

எவ்வாறெனினும், இதன் தாக்கம் அண்டை நாடான நேபாளம் மற்றும் இந்தியாவின் சில பகுதிகளிலும் உணரப்பட்டதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என கூறப்படுகிறது.

நிலநடுக்கத்தை அடுத்து சமூக ஊடக பதிவுகள் இடிந்து வீழ்ந்த கட்டடங்களையும், மீட்பு பணிகளையும் வெளிக்காட்டுகின்றன.

அனர்த்தத்தை அடுத்து தீபத்தின் பல பகுதிகளுக்கான மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் இரண்டும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், உயிரிழப்புகளைக் குறைப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றுவதற்கும் முழுமையான தேடல் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேபாளத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டாலும் அங்கு சொத்து சேதமோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை என்று ஆரம்பக் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய மற்றும் யூரேசிய டெக்டோனிக் தகடுகளின் பெரிய கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள இப்பகுதி, அடிக்கடி நில அதிர்வு நடவடிக்கைகளுக்கு தாயகமாக உள்ளது.

2015 ஆம் ஆண்டில், நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டு அருகே ஏற்பட்ட 7.8 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கத்தில் சுமார் 9,000 பேர் உயிரிழந்தனர் மற்றும் 20,000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பனிப்புயல் காரணமாக அமெரிக்கர்கள் அவதி



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பனிப்புயல் காரணமாக 6 மாநிலங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கென்டக்கி, விர்ஜினியா, மேற்கு விர்ஜினியா, கன்சாஸ், அர்கன்சாஸ் மற்றும் மிசௌரி ஆகிய மாநிலங்கள் பனிப்புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், மேற்படி பகுதிகளுக்கு யாரும் பயணம் செய்யவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பனிப்புயல் காரணமாக 1,500 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 07/01/2025

## நாயை துப்பாக்கியால் சுட்ட நபரை தேடும் பொலிஸார்

கனடாவின் நயாகரா பகுதியில் நாய் ஒன்றை துப்பாக்கியால் சுட்ட நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒரு வயதான 02▶



# லிபரல் கட்சி தலைமைப் பதவிக்கு குறி வைக்கின்றார் மார்க் கர்னி

கனடிய லிபரல் கட்சியின் தலைமை பதவியை பெற்றுக் கொள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மார்க் கார்னி முயற்சிக்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

மார்க் கர்னி கனடிய மத்திய வங்கி ஆளுநராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அவர் லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்கான முனைப்புகளில் ஈடுபட்டுள்ளார். 02▶






# கனடாவின் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தவர் கைது

கனடாவின் எல்லை பகுதிக்குள் அத்து மீறி பிரவேசித்த சாரதி ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பிய எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் இவ்வாறு மேற்படி நபரை கைது செய்துள்ளனர்.

அமெரிக்க எல்லை பகுதியிலிருந்து கனடிய எல்லை பகுதி பகுதிக்குள் அந்த நபர் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

அந்த நபரை கனடிய எல்லை பாதுகாப்பு முகவர் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாநில வாகன இலக்கத் தகட்டைக் கொண்ட வாகனம் ஒன்றே இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவன அதிகாரிகளின் உத்தரவிற்கு கட்டுப்படாது வாகனத்தைச் செலுத்தியதாகவும் வாகனம் கட்டுப்பாட்டை இழந்துசிறுவிபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# கனடா வெஸ்ட் ஜெட் விமானத்தில் குழப்பம் விளைவித்த பெண் கைது

கனடாவில் விமானம் ஒன்றில் குழப்பம் விளைவித்த பெண் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வெஸ்ட் ஜெட் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கல்கரியில் இருந்து ரொறன்ரோ நோக்கி பயணம் செய்ய விருந்த விமானத்தில் இவ்வாறு மேற்படி பெண் குழப்பம் விளைவித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெஸ்ட்ஜெட் விமான சேவைக்கு சொந்தமான 670 என்ற இலக்கத்தைக் கொண்ட விமானத்தில் பயணிக்க விருந்த பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மொத்தமாக இருக்க வேண்டிய பயணிகளின் எண்ணிக்கையை விடவும் அதிகமான பயணிகள் விமானத்தில் ஏறி இருந்தமை கண்டறியப்பட்டது.

மேற்படி பெண் தங்களது ஆசனத்தில் வந்து அமர்வதாக பல பயணிகள் விமான பணியாளர்களிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஒட்டுமொத்த விமான பயணிகளும் விமானத்திலிருந்து தரையிறக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, அந்த பெண் குழப்பம் விளைவித்தமைகண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொலிஸார் கல்கரி சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அந்த பெண்ணை கைது செய்துள்ளனர். பின்னர் ஏனைய பயணிகள் பாது காப்பாக விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## நாயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாய் ஒன்று கொல்லப்பட்டுள்ளது.

நாயகரா பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைதுப்பாக்கி ஒன்றின் மூலம் மேற்படி நாய் சுடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்த நாயை மீட்டு பொலிஸார் சிகிச்சை அளித்த போதிலும் சிகிச்சை பலனின்றி நாய் உயிர் இழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நாயை துப்பாக்கியால் சுடும் நோக்கம் இருக்கவில்லை எனவும் தவறுதலாக துப்பாக்கி செயற்பட்டதில் நாய் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

26 வயதான அன்தனி அன்கோரி என்ற நபரே இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபருக்கு எதிராக வேறும் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என குறிப்பிடத்தக்கது.



## லிபரல் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். நாளை புதன்கிழமை லிபரல் கட்சி கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் மார்க் கர்னி லிபரல் கட்சியின் பல உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, லிபரக் கட்சிக்கான மக்கள் ஆதரவு வெகுவாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லிபரல் கட்சிக்கான ஆதரவு 21 வீதமாகவும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கான ஆதரவு 47 வீதமாகவும் ஆகவும் காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நானோஸ் ஆய்வு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.




# அமெரிக்க - கனடியே எல்லை பகுதியில் பஸ் விபத்து; 15 பயணிகள் படுகாயம்

அமெரிக்க கனடிய எல்லை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிலர் காயமடைந்துள்ளனர்.

கனடாவின் கியூபெக் கிழக்கு பகுதியில் இந்த விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது. மொன்றியலுக்கு தென் கிழக்காக சுமார் 672 கிலோ மீட்டர் தொலைவில் செயின்ட் ஆர்மெண்ட் பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததினால் இந்த விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 15 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 40 பயணிகள் சிறுகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.




# கனடாவில் தற்காலிகமாக வாசிப்போருக்கு மறுக்கப்படும் ‘பிளாக்போலிங்’ சந்தர்ப்பம்

கனடாவில் தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சந்தர்ப்பமொன்று ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாக்போலிங் (flagpoling) என்ற இந்த சந்தர்ப்பமானது கனடாவில் தற்காலிகமாக வதிபவர்கள் அமெரிக்கா கனடிய எல்லை பகுதிகளை கடப்பதற்கு உதவும் முறையாகும்.

இதுவரை காலமும் அமெரிக்க மற்றும் கனடிய எல்லை பகுதியின் இந்த பிளாக்போலிங் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் இனிவரும் காலங்களில் கனடிய குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு விண்ணப்பம் செய்வதன் மூலமே இந்த வசதியை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய நடைமுறையானது தற்காலிகமாக வதிவோருக்கு தொழில் அனுமதி மற்றும் கல்வி அனுமதிக்கான சந்தர்ப்பங்கள் வரையறுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

பிளாக்போலிங் முறையானது விசா பெற்று கொள்வதற்கு ஓர் இலகுவான வழியாகும் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எதிர்வரும் காலங்களில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு குடியேறிகள் மேற்கொள்ளும் துஷ்பிரயோகங்களை தடுக்கும் நோக்கில் இந்த முறைமையை இடைநிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிளாக்போலிங் சந்தர்ப்பம் மறுக்கப்படுவதனால் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு தொழில் மற்றும் கல்வி வீசா பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.